செய்தி வெளியீடு எண்:321 நாள் : 04.07.2016

# செய்தி வெளியீடு

## மொழி பெயர்ப்பாளர் விருது

தமிழ்நாடு வரலாற்றில் எக்காலத்திலும் இதுவரையில்லாத அளவிற்குத் தமிழுக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் பாடுபடும் தமிழறிஞர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எண்ணற்ற விருதுகளும் பரிசுப் பாராட்டுச் சான்றுகளும், நலத்திட்டங்களும் வழங்கிச் சிறப்பித்து வருகிறார்கள். இவ்வரிசையில் "சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச் செல்வங்கள் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்" எனும் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் கூற்றுப்படி பிறமொழிப் படைப்புகளைச் சிறந்த முறையில் தமிழாக்கம் செய்யும் 10 மொழிபெயர்ப்பாளர்களுக்கு ஆண்டுதோறும் மொழிபெயர்ப்பாளர் விருது வழங்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110இன் கீழ் சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இவ்வறிப்பினைச் செயற்படுத்தும் வகையில் பிற மொழிப் படைப்புகளைத் தமிழாக்கம் செய்துவரும் மொழிபெயர்ப்பாளர்கள் இவ்விருதுக்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிப்பவர்கள் நிழற்படத்துடன் தன் விவரக் குறிப்புகளுடனும் மொழிபெயர்ப்புச் செய்த நூல்களின் விவரம் மற்றும் அந்நூல்களின் ஒரு படி வீதமும் கீழ்க்குறிப்பிட்டுள்ள முகவரிக்கு 31.07.2016 ஆம் நாளுக்குள் கிடைக்கும் வகையில் அனுப்ப வேண்டும்.

தமிழ் வளர்ச்சி இயக்குநர்,
தமிழ் வளர்ச்சி இயக்ககம்,
தமிழ் வளர்ச்சி வளாகம், முதல் தளம்,
தமிழ்ச்சாலை, எழும்பூர்,
சென்னை – 600 008
தொலைபேசி எண் : 044 2819 0412
044 2819 0413
மின்னஞ்சல் முகவரி: tamilvalarchithurai@gmail.com

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9